# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

**Mobile: 0449 892 066**

**Email :**[mtdruitttsc@gmail.com](mailto:mtdruitttsc@gmail.com) **Web :** [www.mtsc.org.au](http://www.mtsc.org.au)


### செய்தி மடல் 2018 — 03 04-08-2018

***"தமிழ்" அவமானம் அல்ல எமது "அடையாளம்"***. அத்தமிழை கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.




1. *கலை விழா 2018*

   **எமது பாடசாலையின் வருடாந்த கலை விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 29ம் திகதி (29.09.2018) சனிக்கிழமை அன்று மாலை. 5.00 மணிக்கு Erskine Park High School (82 Swallow Dr, Erskine Park NSW 2759) நடைபெறும்.** எனவே எமது அனைத்து மாணவர்களும் மாலை 4.45 மணிக்கு முன்னதாக சமூகமளித்து அனைத்து மாணவர்களும் பங்குபற்றும் முதல்நிகழ்ச்சி சிறப்புற நடைபெற ஒத்துழைப்பை வழங்கும் வண்ணம் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். தவிர்க்கமுடியாத காரணத்தால் உரிய நேரத்திற்கு சமூகமளிக்க முடியாதவிடத்தில் உடனடியாக தங்களது வகுப்பு ஆசிரியரை தொடர்பு கொண்டு உங்களது நிகழ்ச்சி சிறப்புற நடைபெற ஒத்துழைப்பை வழங்கவும். அத்துடன் நீங்கள் அனைவரும் பாடசாலை வாகன தரிப்பிடத்தை பயன்படுத்தலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். மற்றும் கலை விழா அன்று உங்களுக்கு தேவையான இரவு உணவை நீங்கள் முன்கூட்டியே பாடசாலை நிர்வாகத்திடம் உரிய பணத்தை செலுத்தி உங்களுக்கான உணவு குறியை (*token*) பெற்றுக்கொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

   அத்துடன் **கலை விழாவிற்கான ஒத்திகை முதல் நாள் வெள்ளிக்கிழமை (28.09.2018) மாலை 6.00 மணிக்கு Erskine Park High School (82 Swallow Dr, Erskine Park NSW 2759) பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.** கலை விழா ஒத்திகையன்று பாடசாலை நிர்வாகம் அனைவருக்கும் இரவு உணவு வழங்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

2. *பெற்றோர் கலந்துரையாடல்*

   எதிர்வரும் **11.08.2018 சனிக்கிழமை அன்று பி.ப. 2.30 மணிக்கு** நடைபெற இருக்கும் பாடசாலை கலைவிழா பற்றிய முக்கிய கலந்துரையாடலுக்கு சகல பெற்றோர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

3. *அமைச்சர் விருது - 2018 (Minister Award)*

   இந்த வருடம் எமது பாடசாலையில் இருந்து பின்வரும் மாணவர்கள் 2018 ஆண்டிற்கான அமைச்சர் விருதுபெறுவதற்கு எமது கல்விக்குழுவினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

   **வாமிகா குகனேஸ்வரன்** மேற்பிரிவு
   **அபிராமி சசிசுதன்** கீழ்பிரிவு

   இந்த இரண்டு மாணவர்களையும் மவுண்ட்றூயிட் தமிழ் கல்வி நிலையம் தனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

4. *பாடசாலை நேரம்*

   பிள்ளைகளை பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு அனுப்பிவைக்குமாறும், பாடசாலை முடிவடையும்போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

   | | |
   |---|---|
   | ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
   | இடைவேளை : | பி.ப. 3.30ல் இருந்து பி.ப. 3.45 மணி வரை |
   | முடிவடையும் நேரம் : | பி.ப. 5.00 மணி |

5. *மாணவர்களின் விபரங்கள்*

   அனைத்து மாணவர்களும் உங்களது அல்லது உங்கள் பெற்றோரது மின்னஞ்சல் (email) முகவரிக்கு பாடசாலையால் அனுப்பப்பட்ட இணைப்பின் (link) மூலம் பாடசாலையின் மாணவர் விண்ணப்பப்படிவத்தை (Online Application Form) பூர்த்திசெய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

6. *மாணவர் வரவு மற்றும் ஒழுக்கம்*

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருவது அவர்களது கல்விக்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானதாகும். மாணவர்கள் வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களை குழப்பாமலும் வகுப்பறை பொருட்களை சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தாமலும் வகுப்பு உடமைகளை சேதப்படுத்தாமலும் இருக்க வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் தொலைபேசியையோ அல்லது ஏனைய இலத்திரனியல் உபகரணங்களையோ (IPad, Tablet, Nintendo, etc )பாவிப்பதை கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.

7. *பெற்றோர் கொடுப்பனவு*

உங்கள் பிள்ளைகளுக்கான பாடசாலை கட்டணத்தை தவணை மூன்று முடியும் முன் செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். ( ஒரு மாணவர் வருடக் கட்டணம் $100, மற்றும் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்களிற்கு வருடக்கட்டணம் $175.) மேலதிக விபரங்களுக்கு எமது கல்விநிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்புகொள்ளவும்.

8. *பேச்சுப்போட்டி*

எமது பாடசாலையின் வருடாந்த பேச்சுப்போட்டியில் பங்குபற்றி போட்டி சிறப்பாக நடைபெறுவதற்கு காரணமான மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாடசாலை நிர்வாகம் தனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றது. மாணவர்கள் திறமையாக மேடையில் பேசுவதற்கு பக்கபலமாக இருந்த பெற்றோர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் பாடசாலை நிர்வாகம் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றது.

9. *கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை - 2018 (Federation Exam)*

தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சையில் எமது பாடசாலையின் அனைத்து மாணவர்களும் முதன்முறையாக இந்த வருடம் பங்குபற்றினார்கள். அவர்களுக்கான பரீட்சை கட்டணத்தை பாடசாலையே செலுத்தியது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

10. *சரஸ்வதி பூஜை*

**நான்காம் தவணை ஆரம்பமாகும் தினமான எதிர்வரும் 20.10.2018 அன்று எமது பாடசாலையில் சரஸ்வதி பூஜை** நடைபெறும். அனைவரும் எமது கலாச்சார உடையணிந்து வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். அன்றைய தினம் உங்களின் பிள்ளைகள் குழுவாக தேவாரம், திருவாசகம் அல்லது சைவ சமயம் சம்பந்தமான பாடல்கள் படிக்கவிரும்பினாலோ அல்லது வேறு ஏதேனும் சங்கீதம் இசைக்க விரும்பினாலும் பெற்றோர்கள் உங்களது ஆசிரியர்களை தொடர்பு கொண்டு குழுவாக அவர்களை தயார்செய்து அழைத்துவரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அன்றைய தினம் வழமைபோல் பெற்றோர்களினால் கொண்டுவரப்பட்ட பிரசாதங்கள் பூஜை முடிந்தபிறகு அனைவருக்கும் வழங்கப்பட்டு சரஸ்வதி பூஜை நிகழ்ச்சி இனிதே நிறைவுபெறும்.

11. *பாடசாலைவிடுமுறை*

எமது பாடசாலையின் **தவணை மூன்று எதிர்வரும் 29.09.2018** அன்றுடன் முடிவடைந்து **நான்காம் தவணை வருகின்ற 20.10.2018** அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.





*கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு*

*மாடல்ல மற்றையவை.* — *திருவள்ளுவர்.*

(ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. மற்றைய செல்வங்களெல்லாம் செல்வங்களாக மாட்டா.)